**அனுராதபுரம் மாநகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அனுராதபுரம் மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று/ தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 219 ஆம் பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் அனுராதபுரம் மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாநகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3.7 இன் பிரகாரம் மாநகர சபை தயாரித்த பாதீட்டு ஆவணங்களில் பாதீடு செய்யப்பட்ட தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பாதீட்டு தகவல்களின்றி நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 2017 இனை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3.7 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு | சரியாக நிலையான வைப்பு வட்டி கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | வட்டி வருமானம் ரூபா 781,844 ஆக இருந்த போதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது ரூபா 1,394,344 ஆக காண்பிக்கப்பட்டதன் காரணமாக நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 612,500 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | நிலையான வைப்பு வட்டி சரியாக கணிப்பீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மாநகர சபைக்கு ஏற்பட்டிருந்த ரூபா 4,934,124 ஆன இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் நிதிக்கூற்றக்களில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான இழப்பு மற்றும் நட்ட பெறுமதியை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | மாநகர சபையின் 06 கார்பேஜ் டிரெயிலர்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு நடைமுறையல்லாச் சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் 02 தீயணைப்பு வண்டிகள் மற்றும் 13 டிரெயிலர்களின் பெறுமதி என்பன முழுமையாக பெறுமானத்தேய்வு செய்து முடிவடைந்திருந்த போதிலும் அந்த வாகனங்கள் தொடர்ந்தும் பயன்படுத்துகின்றமையால் அந்த வாகனங்களை மீள்மதிப்பீடு செய்து நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து எதிர்வரும் ஆண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து நடைமுறையல்லா சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | முன்னைய ஆண்டின் மத்திய அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் மூலதன செலவினமாக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 32,739,981 ஆன சொத்துக்கள் மற்றும் கடன்பட்டோர், கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 19,357,320 ஆன மதகுகள் மற்றும் வீதிகளின் பெறுமதி மூலதன மானியமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய மூலதன செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் மூலதன மானியத்தின் கீழ் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்ட மூலதன செலவினம் ரூபா 27,339,733 மற்றும் மீண்டெழும் செலவினம் | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதன செலவினங்கள் மற்றும் மீண்டெழும் செலவினங்கள் பொறுப்புக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 2,625,822 தொகை என்பன சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றிலும் விரிவான வருமானக் கூற்றிலும் குறிப்பிடப்படாமையால் நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதன மானியங்களின் பெறுமதி ரூபா 27,339,733 இனாலும், மீண்டெழும் மானியம் ரூபா 2,625,822 இனாலும் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | மற்றும் சொத்துக்கள் கூற்றிலும், விரிவான வருமானக் கூற்றிலும் சரியாக குறிப்பிடப்படல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவினம் ரூபா 3,209,146 மூலதன செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் சரியாக மூலதன செலவினம் மற்றும் மீண்டெழும் செலவினங்களை பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மூலதன செலவினம் மற்றும் மீண்டெழும் செலவினங்களில் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டில் மூலதன செலவினம் ரூபா 32,391,108 தொகை செலவில் கட்டியெழுப்பப்பட்ட நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது நிதிக்கூற்றில் சமர்ப்பிக்கப்படும். | மீளாய்வாண்டிற் குரிய மூலதன செலவினங்கள் நிலையான சொத்தாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் நன்கொடை பெறுவனவுகள் ரூபா 48,080,074 மூலதன மானியமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாட்குறிப்பு பதிவின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதன மானியம் ரூபா 74,735,898 ஆக இருந்த போதும் விரிவான வருமானக் கூற்றில் அது ரூபா 13,221,590 ஆக ரூபா 61,514,308 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாட்குறிப்பு பதிவின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | மிகையில் அல்லது பற்றாக்குறையில் இனங்காணப்பட்ட மூலதன செலவினங்களின் மானிய பெறுமதி ரூபா 3,397,025 ஆக இருந்த போதும் விரிவான | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாட்குறிப்பு பதிவின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானக் கூற்றில் அது ரூபா 1,935,732 ஆக ரூபா 1,461,293 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஓ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உறுதிப்படுத்தப்படாத மற்றும் நிறைவேற்றப்படாத வேலைகளின் பெறுமதி ரூபா 79,030,894 கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்தப் பெறுமதியை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உறுதிப்படுத்தப் படாத மற்றும் நிறைவேற்றப்படாத வேலைகளை கணக்கீடு செய்யாதிருத்தல் வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 19 விடயங்களில் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் பட்டோலைகளில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கும் இடையே ரூபா 10,976,143,439 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்வரும் ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாட்டிற்கான காரணத்தை கண்டறிந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுமதி ரூபா 2,683,312 ஆன வீட்டு வாடகை கடன்பட்டோரை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பட்டோலைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பட்டோலைகள் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வீட்டு வாடகை கடன்பட்டோர் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்குரிய பட்டோலைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன | 2016 யூன் 21 ஆந் திகதி முதல் இடமாற்றலாகிச் சென்ற முன்னாள் நகர ஆணையாரின் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.3.1 மற்றும் 7.2 ஆம் பிரிவுகள் | உத்தியோகபூர்வ இல்லம் கையளிக்கப்படாதிருந்த துடன் அவர் அந்த வீட்டில் குடியிருந்ததற்காக 2009 நவம்பர் முதல் 2016 யூன் வரை ரூபா 201,017 தொகையும், 2020 சனவரி 01 முதல் 2022 மார்ச் வரை ரூபா 228,033 தொகையும் வீட்டு வாடகையாக அறவிடப்படாதிருந்ததுடன் உத்தியோகபூர்வ இல்லத்தின் அங்கீகாரம் இன்றி தங்கியிருந்த (2016 யூலை முதல் 2022 மார்ச் அறிக்கைத் திகதி வரை) காலத்திற்கு ரூபா 376,643 தண்டப்பண வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக 1969 இன் 07 ஆம் இலக்க அரசாங்கத்தின் வீடுகள் (உரித்தை மீளப் பெற்றுக் கொள்ளல்) சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | XIX ஆம் அத்தியாயத்தின் 5.3.1 மற்றும் 7.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | பொருள் மெய்மையாய்வை மேற்கொண்டு அறிக்கையை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான செயற்படு நிலையில் உள்ள 36 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எரிபொருள் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதன் பின்னர் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 46,807,370 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 46,960,582 ஆகும்.

## 2.2 நிதிக்கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அனுராதபுரம் மாநகர சபையின் 06 நடைமுறைக் கணக்குகளுக்குரியதாக வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் தேறாதிருந்த பெறுமதி ரூபா 2,466,494 ஆன 23 காசோலைகள் தொடர்பாக காரணங்களை கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தகவல்களை கண்டறிந்து கொள்வதற்கு வசதியீனமாக இருந்தமையால் இதற்காக தீர்மானம் எடுப்பதற்கு முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அந்த காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 189 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 06 நடைமுறைக் கணக்குகளுக்குரியதாக 16 சந்தர்ப்பங்களின்போது கிடைக்கப்பெற்ற நேரடி வைப்புக்கள் ரூபா 6,553,801 தொகையை இனங்கண்டு வருமான விடயத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனேகமான கிடைப்பனவுகள் சரியாக இனங்கண்டு காசேட்டில் பதியப்பட்டுள்ளது. | உரிய நேரடி வைப்புக்களை இனங்கண்டு வருமான விடயத்தில் செலவு வைத்தல் வேண்டும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்**<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 112,725,978 தொகையான நிலுவை ஆதனவரி வருமானத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொரோனா தொற்று நோய்க்கிடையே உரிய பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | **வாடகை**<br>மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 58,550,284 ஆன நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமைக்கிடையே நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | விரைவாக நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,200,200 தொகையான வியாபார அனுமதிப்பத்திர வருமானத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொரோனா தொற்றநோய் நிலைமையின் காரணமாக அனுமதிப்பத்திரக் கட்டண அறவீடுகள் கீழ் மட்டத்தில் காணப்பட்டதுடன் அனுமதிப்பத்திரம் செலுத்தாத வியாபாரங்களுக்காக வழக்கு தொடருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கிடைக்கவேண்டிய வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணங்களை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஈ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,182,193 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 21,242,282 என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்குள்ள நீதிமன்றத் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடுவதற்குள்ள நீதிமன்ற தண்டப்பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கீரிக்குளம் பிளிசறு செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட எக்ஸ்சவேட்டர் இயந்திரம் 2014 செப்தெம்பர் 18 ஆந் திகதி தீப்பிடித்தல் தொடர்பாக முறையாக நிதிப்பிரமாணம் 104 பரிசோதனைமேற்கொண்டு ரூபா 3.3 மில்லியன் நட்டத்திற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு அந்த பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விசாரணை அறிக்கை பரிந்துரைக்காக உள்ளூராட்சி ஆணையாளரால் அங்கீகாரம் அல்லது முறையான ஒழுக்காற்று கட்டளை வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் பரிசோதனைகள் விரைவாக பூர்த்தி செய்யப்பட்டு அந்த பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2012 முதல் 2018 வரையான காலத்தில் மாநகர சபையில் ஏற்பட்டிருந்த இரண்டு நிதி மோசடிகளுக்காக சபை நிதியத்திற்கு ஏற்பட்ட ரூபா 47,174,493 ஆன நிதிரீதியான நட்டத்தை மீளாய்வாண்டின் போதும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | ஏற்பட்ட நட்டத்தில் ரூபா 64,164 அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதி பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிரீதியான நட்டத்திற்கு உரிய தரப்பினரிடமிருந்து விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மாநகர சபையில் சேவையாற்றி 2013 ஆம் ஆண்டின் போது இன்னுமொரு நிறுவனத்திற்கு இடமாற்றலாகிச் சென்ற ஊழியருக்கு இடமாற்றலாகிச் சென்ற தினம் முதல் 2018 யூன் மாதம் வரையான காலப்பகுதிக்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,816,557 தொகை செலுத்தப்பட்டமையால் சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்த நிதி ரீதியான நட்டம் ஆரம்ப விசாரணை அறிக்கைகளில் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்குரிய ஒழுக்காற்று விசாரணைகளை பூர்த்தி செய்ததன் பின்னர் ஒழுக்காற்று கட்டளையின் பிரகாரம் பிரதம அமைச்சின் மூலம் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | ஆரம்ப விசாரணை அறிக்கைகளில் உறுதிப்படுத்தப் பட்ட நிதிரீதியான நட்டத்தை உரிய தரப்பினரிடமிருந்து கூடிய விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 02 வருடங்களுக்கும் 07 வருடங்களுக்கும் இடையிலான காலப்பகுதியில் உரிய தரப்பினருக்கு செலுத்தி விடுவிக்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 7,635,205 தொகையான வைப்பு மீதியை செலுத்தி தீர்த்து வைப்பதற்கு 2021 ஆம் ஆண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வைப்பு மீதியை தீர்த்து வைக்கப்படாத மீதியாகும். | மீதியை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 02 வருடங்களை விட பழைய உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 118,717 தொகை மீளாய்வாண்டின் போதும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆலோசனையை பெற்று வரித் தொகையை செலுத்துதல் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | பணத்தை செலுத்தி மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு 2019 ஆம் ஆண்டு முதல் செலுத்த வேண்டிய ரூபா 489,760 மற்றும் ஏனைய கடன்கொடுத்தோருக்கு செலுத்த வேண்டிய ரூபா | கடன்கொடுத்தோருக்காக பணத்தை செலுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்கொடுத்தோர் மீதியை விரைவாக செலுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 1,426,907 தொகை என்பவற்றை செலுத்தி தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | 2011 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 4,243,250 இனை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபை தீர்மானத்தின் பிரகாரம் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வு கட்டணத்தை விரைவாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | மாநகர சபையில் இயந்திரம் மற்றும் கலிபவுசர் பணம் அறவிடாமல் வழங்கப்பட்டமையால் 2021 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 864,840 அறவிடப்பட்டிருக்க வில்லை. | இந்த ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடுவதற்குள்ள நிலுவைப் பணத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஐ) | மாநகர சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 05 வருடங்களை விஞ்சிய காலம் முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 3,029,562 பெறவேண்டிய 02 கடன் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்த கடன் மீதியை அறவிட வேண்டிய தரப்பினரும் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | இந்த ஆண்டின் போது மிகுதி நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் மீதியை அறவிட வேண்டிய தரப்பினரை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | 02-03 வருடங்களை விஞ்சிய காலம் முதல் செலுத்த வேண்டியதாக காணப்படுகின்ற ரூபா 718,717 ஆன 03 கடன் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செலுத்த வேண்டிய தரப்பினரை இனங்கண்டு கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஓ) | சட்டப்பிரிவின் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு எதிராக 29 தரப்பினரும், சபையினால் வெளித்தரப்பினர் 04 பேர்களுக்கு எதிராகவும் வழக்கு தொடரப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் வருடத்தின் போது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எதிர்பாராத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |